**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 74. ஸ்ரீஞானேஸ்வர மஹராஜ்**

மஹாராஷ்ட்ராவில் அனைவரும் அறிந்து மதிக்கும் மிக உயர்ந்த ஆன்மீக அன்பர் ஸ்ரீஞானேஸ்வரர்.பாரத தேசத்தின் மிக உன்னத அன்பர்கள் வரிசையில் இவருக்கும் சிறந்த இடம் உண்டு. இவர் ப்கவத் கீதையை மிகவும் எளிமையாக, எதார்த்த வாழ்வில் இக்கால மனிதனுக்கு ஏற்ற முறையில் "பாவார்த்த தீபிகா" என்று அருளினார்.ஆனால் மக்களின் வழக்கில் அது "ஞானேஸ்வரி" ஆனது.பத்தாயிரம் எளிய செய்யுள்களால் அந்நூல் அமைகிறது.

பாண்டுரங்கன் மீதான அபங்கங்களும் இவர் பாடினார்.மொத்தம் 28 பாடல்கள் கிடைத்தன.அவற்றை "ஹரிபாத்" என்று மக்கள் கூறுவர்.

அத்வைத சைவ சித்தாந்த நூலான "அம்ருதானுபவ்" இவரால் அருளப்பட்டது.

பூனாவில் உள்ள பாரத் இதிஹாஸ சம்சோதக் மண்டலியில் இவரது கையெழுத்து ப்ரதிகள் மிகவும் ஸ்ரத்தையுடன் காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன.

இவரது ஜீவ சமாதியை மக்கள் "தேவாளா ஆனந்தீ" என்று மிகவும் போற்றி வழிபடுகிறார்கள்.அது அகமத் நகருக்கு அருகில் 22 மைல் தொலைவில் நெவஸே என்ற ஊரில் உள்ளது.

வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள்:
இவரது அப்பா விட்டோபா மிகச் சிறிய வயது முதல் ப்ரஹ்ம தத்வத்தை உணரும் ஆழ்ந்த ஆன்மீக வாழ்க்கையை விரும்பியவர்.ஆனால் பூர்வ ஜென்ம வாசனையின் பேரில் அவர் ருக்மாபாய் என்ற பெண்ணுடன் வாழ நேரிட்டது.இல்லறத்தில் ஈடுபாடே இல்லாத கட்டாயப்படுத்தப் பட்ட வாழ்க்கை இவருடையது.

இவருக்குப் பிறந்த நான்கு குழந்தைகளில் முதல் மகன் தான் ஞானேஸ்வர்.

காசிக்குச் சென்று ஒரு ஆன்மீக குருவின் கீழ் வாழ்ந்த இவர், குருவின் அறிவுரைப்படி மீண்டும் இல்லறம் செய்தார்.இதன் மூலம் சமூஹத்தில் அவருக்கு அவமதிப்பே ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் முழுக்க முழுக்கத் தன்னை நிர்விகல்ப சமாதியில் லயிக்கச் செய்து வாழ்ந்த இவரது குடும்பத்தை ஊரார் அவமதித்தனர்.

மிகச் சிறிய வயதில் ஆத்ம ஞானம் பெற்ற ஞானேஸ்வரர் தன் தந்தைக்கு ஏற்பட்ட அவமதிப்பை ஞானத்தின் மூலம் மக்களுக்கு எடுத்து உரைத்து நீக்கினார்.

மிகவும் ஸ்திடமான பக்தியும் ஆத்ம சாதனையும் கைவரப் பெற்ற அவரது வாழ்க்கையால் ஈர்க்கப் பட்ட பல சாதி மக்களும் அவரை குருவாக அண்டினர்.

மஹாராஷ்ட்ராவின் சாதி வேற்றுமைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய ஆன்மீகப் பெரியார் ஞானேஸ்வரர்.

அதனால் தான் இன்றும் அவரது புகழை அம்மக்கள் மனதில் நன்றியுடன் வைத்துக் கொண்டாடுகின்றனர்.

இவரது இளைய தமக்கையே முக்தா பாய்.பாண்டுரங்க பக்தியின் மூலம் ஆன்மீக-பக்தியை மஹாராஷ்ட்ராவில் இருவரும் பரவச் செய்து மக்களுக்கு உயர்ந்த வழி காட்டினர்.

ஞானேஸ்வரர் ஜீவ சமாதி அடைந்தார்!

ஹரி ஓம்!